**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS.384/2022**

பெயர் : விஜயா (PW1) (Cross)

த/க/பெ. :

தேதி :18.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் சிலவற்றை கிரயம் வாங்கி உள்ளார்கள். கிரயம் வாங்கிய சொத்து 2, 3 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளதுஎன்றால் சரிதான். என் கணவருக்கு தெரியாமால் வாங்கி விட்டார்கள். சர்வேண் எண் 440 ல் 180 குழியில் 25 குழீ 2 ம்பிரதிவாதி வாங்கி உள்ளார். அது அவர் வசம் தான் உள்ளது. எந்த வருடம் வாங்கினார் என்பது தெரியவில்லை. அவர் வாங்கிய பின்னர் தான் வழக்கு போட்டோம். 3 ம் பிரதிவாதி 250 குழி சர்வே எண். 180 ல் வாங்கியுள்ளார். அது அவரிடம் தான் உள்ளது. 2015 ல் தான் 2, 3 பிரதிவாதிகள் கிரயம் வாங்கினார்கள். வழக்கிற்கு முன்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் நேரடியாக கேட்டோம் முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள். 2 ம்பிரதிவாதி வாங்கிய சொத்தின் தற்போதைய மதிப்பு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் எங்களுக்கு பங்காளிகள் இல்லை. அவர்கள் 3 ம் நபர்கள் என்பதால் கூட்டு அனுபவம் என்று வழக்கு போட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 1989 ம் ஆண்டு வா.சா.ஆ. 1 பாக பிரிவினை பத்திரத்தில் பி பட்டியல் சொத்து என் மாமனாருக்கு ஒதுக்கப்பட்டதில் விற்பனை செய்த சொத்துக்கள் காணப்படவில்லை என்றால் சரியல்ல. பி பட்டியலில் கணேசனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தாவா 1 மற்றும் 2 அயிட்டம் மட்டும் என்றால் தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்துக்கள் சம்பந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்தோமா மஎன்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் கோவில் இடம் என்று சொல்லி உள்ளோம். வழக்கிற்கான விவரங்களை என் கணவர் மற்றும் மாமியார் சொன்னார்கள். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் சரியா தவறா என்பது எனக்கு தெரியாது. வழக்குரை விவரங்கள் சரியானவையா என்பதை என் கணவர் மற்றும் மாமியாரை கேட்டதால் தான் அவர்களால் சொல்ல இயலும் என்றால் சரிதான். அவர்களால் வர இயலவில்லை என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். தாவா 1, 2 அயிட்டம் தவிர மற்ற எந்த அயிட்ட சொத்துக்களும் கணேசனுக்கு சொந்தமானது அல்ல என்றால்

பொது பாத்தியத்தில் உள்ளது. 05.02.2002 பாக பிரிவினை ஆவணத்தில் என் மாமியார் என் கணவர் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் அப்போது எனக்கு திருமணம் ஆகவில்லை ஏமாற்றி கையெழுத்து வாங்கியதாக என் கணவர் கூறினார். என் மாமியாரும் சொன்னார். என் மாமியாரும் என் கணவரும் நீதிமன்றம் வந்தால் உண்மையை சொல்லி விடுவார்கள் என்பதால் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2003 ம் ஆண்டு பி.வா.சா.ஆ. 1 மிரட்டி வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் கணவரும் என் மாமியாரும் பி.வா.சா.ஆ.1ல் மிரட்டி கையெழுத்து வாங்கியதாக என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். 2003 ம் ஆண்டிலிருந்து வழக்கு தாக்கல் செய்யாததற்கு காரணம் என் கணவரின் அண்ணன் முதல் பிரதிவாதி திருந்துவார் என்று எதிர்பார்த்தோம் ஆனால் திருந்தவில்லை. 2, 3 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்துக்களின் ஆர்.டி.ஆர். பதிவு யார் பெயரில்உள்ளது என்பது தெரியாது. கிரயம் வாங்கியது கோவில் சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து சம்பந்தமான ஏதேனும் பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் இல்லைஎன்றாலும் 2, 3 பிரதிவாதிகளிடம் பணம் பரிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.